# எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2018

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2018 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2018/0001 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | தை 2018 - மார்கழி 2018 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாண நூலகம், யாழ்ப்பல்கலைக்கழக நூலகம், நூலக நிறுவனம், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| பாதீடு (Budget) | |

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.aavanaham.org வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. 2017 வரை நூலக நிறுவனம் 50,000 எழுத்தாவணங்களும் 2,500 பல்லூடக ஆவணங்களுமாக மொத்தம் 52,500 ஆவணங்களை எண்ணிம வடிவங்களில் சேகரித்து இணையத்துக்குக் கொண்டுவந்துள்ளது. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்டச் சுருக்கம்

எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது ஆண்டு தோறும் நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமாகும். எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாகவும் இரவலாகவும் வழங்கும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச் செயற்றிட்டங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலகச் சேகரிப்பில் விடுபட்ட ஆவணங்களையும் புதிதாக

இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களையும் இனங்கண்டு அவற்றை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச் செயற்பாடுகளில் கிடைக்கும் பல்லூடக ஆவணங்களை இணைத்தல் போன்ற செயற்பாடுகள் இச்செயற்றிட்டம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் இச்செயற்றிட்டம் மூலம் 2018இல் 15,500 ஆவணங்கள் நூலகம், ஆவணகம் வலைத்தளங்களில் இணைக்கப்பட்டன.

## இலக்குகளும் நோக்கங்களும்

நூலக நிறுவனத்தின் எண்ணிம சேகரிப்பைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதும் பலப்படுத்துவதும் இச்செயற்றிட்டத்தின் பிரதானமான நோக்கமாகும் எண்ணிமச் சேகரிப்புக்கள் தம்மளவில் முழுமையாக இருந்தால் மட்டுமே அவற்றின் மூலம் ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்கள் கல்வி, ஆராய்ச்சி, சமூக மேம்பாட்டு முயற்சிகளுக்குப் போதிய பயனைப் பெற முடியும். மேலும் அதிகம் பதிவு செய்யப்படாத குரல்களையும் விளிம்புநிலைச் சமூகங்களையும் குறிப்பாக அதிக கவனம் செலுத்தி ஆவணப்படுத்துவதும் இச்செயற்றிடத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.

## செயற்பாட்டு முறைமை

இச்செயற்றிட்டமானது பிரதானமான பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது.

1. **ஆவணங்களைச் சேகரித்தல்:** ஆய்வாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், ஆளுமைகளிடமிருந்தும் நூலகங்கள் உள்ளிட்ட சமூக நிறுவனங்களிடமிருந்தும் கள ஆய்வுகள் மூலமும் ஆவங்கள் சேகரிக்கப்படுகின்றன்.
2. **ஆவணங்களை எண்ணிமப்படுத்தத் தயார் செய்தல்:** ஆவணங்கள் முழுமையாக உள்ளனவா, பதிப்புரிமை அனுமதி உள்ளதா, ஏற்கனவே குறித்த ஆவணம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா போன்றவை சோதிக்கப்பட்டு எண்ணிப் படுத்த அனுப்பபடுகின்றன.
3. **எண்ணிமப்படுத்தல்:** ஆவணங்களுக்குப் பொருத்தமான கருவிகளைப் பயன்படுத்தி நூலக நிறுவனத்தால் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தரத்தில் எண்ணிமப்படுத்தல்
4. **அணுக்கப்படுத்தல்:** எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்து உரிய விபரத் தரவுகளுடன் இணையத்தில் கிடைக்கச் செய்தல்
5. நிறைவுசெய்தல்: எண்ணிமப்படுத்த ஆவணங்களைப் பிரதியெடுத்துக் காப்புப்படிகளை உருவாக்குதலும் மூல ஆவணங்களை உரிமையாளர்களிடம் மீள வழங்குதல் அல்லது சேமித்தல்.

இந்த சேகரிப்பு மேம்பாட்டு திட்டம் பின்வருமாறு செயற்படுத்தப்படுகின்றது.

## அடைவுகள்

ஆவணங்களின் எண்ணிக்கைகள்

| ஆவண வகை | 2017 இறுதி | 2018 அடைவுகள் | 2018 இறுதி |
|---|---|---|---|
| நூல்கள் | 6,625 | 819 | 7,464 |
| இதழ்கள் | 10,060 | 792 | 10,852 |
| பத்திரிகைகள் | 31,050 | 8,214 | 39,264 |

| | | | |
|---|---|---|---|
| பிறஆவணங்கள் | 2,265 | 2,155 | 4,420 |
| பல்லூடக ஆவணங்கள் | 2,500 | 3,500 | 6,000 |
| மொத்தம் | 52,500 | 15,500 | 68,000 |

**எதிர்கொண்ட சவால்கள்**

- தளபாடங்கள் மற்றும் கணணிகள் தேவைப்பட்டமை
- எண்ணிமப்படுத்தலைச் சரிபார்க்கப் பெரிய அளவிலான கணினித்திரைகள் போதிய அளவில் இல்லாமை
- ஆவணங்களை உரிய முறையில் வைப்பதற்கான அலுமாரிகள் தேவைப்பட்டமை
- ஆவணங்களை பாதுகாத்து வைத்தல் தொடர்பாக ஏற்பட்ட இடர்பாடுகள் (குறிப்பாக எலிகள் மற்றும் கரையான் ஆகியவற்றால் சில ஆவணங்கள் பாதிப்படைந்தமை)
- புத்தகங் கட்டும் உபகரணங்களின் தேவையும் அவற்றில் ஏற்பட்ட சிக்கல்களும்
- எண்ணிமக் கோப்புக்களைச் சேமித்து வைத்தலில் ஏற்பட்ட பிரச்சினைகள் (குறிப்பாக ஓர் கணணியிலிருந்து மற்றொரு கணணிக்கு ஆவணங்களை மாற்றுதலில் இருந்த சிக்கல்கள்)

**கற்றல்களும் பரிந்துரைகளும்**

- மேலதிக கணினிகள், பெரிய கணினித்திரைகள், கணினி மேசைகள், அலுமாரிகள், புத்தகங் கட்டும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும்
- LAN எனும் வலையமைப்பு உருவாக்கப்பட வேண்டும்
- புத்தகங்களை கட்டுவதற்கான பயிற்சிகள் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.